**பக்கம்.**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**IP.No. 53/2022**

**ம.சா. 1– ராமலிங்கம்**

**நாள். 17.0–9.2025**

**ம.சா. 1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் அரிசி வியாபாரம் செய்து வருகிறேன். 1வது எதிர்மனுதாரர் என் தொழில் முறையாக எனக்கு பழக்கம். அரிசி கடைக்கு வருவார். 1ம் எதிர்மனுதார் அரிசி வியாபாரம் செய்து வருகிறார். 1வது எதிர்மனுதாரர் அரிசி மில்வைத்துள்ளார். அதை தவிர வேறு சொத்துக்கள் இல்லை. 1வது எதிர்மனுதாரரை கடன் கொடுப்பதற்கு 3 வருடங்களுக்கு முன்பிருந்து தெரியும். 2016 ம் வருடம் முதல் தெரியும். 2,3 எதிர்மனுதாரர்களை நேரடியாக எனக்கு தெரியாது. அவர்கள் என்ன தொழில் செய்கிறார்கள் என எனக்கு தெரியாது. 2,3 எதிர்மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாருக்கு உறவினர் இல்லை என்றால் சரிதான். மசா.ஆ.2. ஐ நான்தான் தாக்கல் செய்துள்ளேன். அதன் சொத்து விவரத்தில் காட்டப்பட்டுள்ள 1 முதல் 3 இலக்க சொத்துக்களில் 1ம் எதிர்மனுதாருக்கு பிரிவினையில்லாத சொத்தில் பாதி பங்கு என்று எழுதப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். மீதி பாதி பங்கு அவருடைய அண்ணனுக்கு பாத்தியப்பட்டது. ம.சா.2. ஆவணத்தை நான் முழுமையாக படித்துப் பார்த்தேன். ம.சா.2. ஆவணத்தில் 14 வது பக்கத்தில் வங்கி பரிவர்த்தனை மூலமாகதான கிரையத்திற்கு தொகை கொடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் காசோலை மூலமாக கொடுக்கப்பட்டுள்ளது. அந்த காசோலை எண்ணின் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வங்கியின் ஸ்டேட்மெண்ட் எடுத்துப் பார்த்தால் 1ம் எதிர்மனுதாருக்கு மேற்படி தொகையை போயிருக்கிறதா இல்லையா என்ற விவரம் தெரிந்து விடும் என்றால் சரிதான். 2,3 எதிர்மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாருக்கு உரிய தொகையை கொடுத்துதான் கிரையம் செய்திருக்கிறார்கள் என்றால் தவறு. மோசடி கிரையம் ஆகும்.

தாவா பி அட்டவணை சொத்தை வங்கியில் அடமானம் வைத்து 1ம் எதிர்மனுதாரும் அவரது சகோதரரும் சேர்ந்து கடன் வாங்கியிருக்கிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. ம.சா.ஆ.3. ஆவணமான வில்லங்க சான்றிதழை நான்தான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். அதை நான் முழுமையாக பார்த்தேன். அதில் 8 வது பக்கத்தில் 8வது வரியில் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியில் கடன் வாங்கியதாக பதிவு இருக்கிறது. 1ம் பிரதிவாதி வங்கி கடனை தீர்த்த பிறகுதான் இந்த கிரையம் 1ம் எதிர்மனுதாரரால் பெறப்பட்டது. அதில் 15வது பக்கத்தில் 2022ம் வருடம் கடன் தீர்த்திருக்கிறார் என்றால் சரிதான். மேற்படி கடனை தீர்த்த உடனே 2,3 எதிர்மனுதாரர்களுக்கு 1ம் எதிர்மனுதாரரின் சகோதரர் கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் 2,3 எதிர்மனுதாரர்களிடம் தொகையை பெற்றுதான் வங்கி கடனை செலுத்தியிருக்கிறார்கள் என்றும் அதன் பிறகு 2,3 எதிர்மனுதாரர்கள் கிரையம் வாங்கியிருக்கிறார்கள் என்றால் தவறு. 1ம் எதிர்மனுதாருக்கு தாவா சொத்துக்களை தவிர வேறு சில சொத்துக்கள் இருக்கிறது

என்றும் அந்த சொத்துக்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் 2,3 எதிர்மனுதாரர்கள் கிரையம் பெற்ற சொத்தின் மீது நடவடிக்கை எடுப்பது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.17 08:46:08 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.